வி.ஐ.டியில் 74 அரசு பள்ளி மாணவர்களுக்கு ‘ஸ்டார்ஸ்’ இலவச என்ஜினீயரிங் கல்விக்கான ஆணை: அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்

வேலூர் , நவ.17–

அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச உயர் கல்வி வழங்க வேலூர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (வி.ஐ.டி) “ஸ்டார்ஸ்” எனும் திட்டத்தை தொடங்கி, அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் அல்லது பேருந்து கட்டணம் இவை அனைத்தையும் இலவசமாக வழங்கி சேவை செய்து வருகிறது.

தமிழ் நாட்டின் 38 மாவட்டங்களிலிருந்து, அரசு பள்ளியில் படித்து மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற ஒரு மாணவனுக்கும் ஒரு மாணவிக்கும் இந்த வாய்ப்பினை வி.ஐ.டி நிர்வாகம் வழங்கி வருகிறது. தமிழ் நாட்டின் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இந்த ஆண்டு “ஸ்டார்ஸ்” திட்டத்தின் மூலம் தேர்வான மாணவ மாணவிகளுக்கு சேர்க்கைக்கான அனுமதிக்கடிதத்தை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

துணைத் தலைவர் சங்கர் விஸ்வநாதன், கூடுதல் பதிவாளர் பி.கே.மனோகரன், ஸ்டார்ஸ் ஒருங்கிணைப்பாளர் பி.பாலமுருகன் உடனிருந்தனர்.

இத்திட்டத்தின் வழியாக இலவச உயர்கல்வி பெறும் மாணவ, மாணவிகளுக்கு, ஆங்கில மொழித்திறன் பயிற்சி, கணினிப் பயிற்சி, பேச்சு திறன் மற்றும் ஆளுமை வளர்ச்சி, ஆலோசனை/வழிகாட்டுதல், அனுபவமிக்க ஆசிரியர்களின் சிறப்பு வகுப்புகள் மற்றும் வளாக நேர்காணலுக்கு உறுதுணையாக இருத்தல் என தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படுகின்றன.

2008ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட இந்த திட்டத்தின் மூலம் இதுவரை 727 மாணவ, மாணவிகள் வாய்ப்பு பெற்று உலக அளவில் பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெற்றிருக்கின்றனர்.

இந்தக் கல்வி ஆண்டில் சென்னையின் 3 வருவாய் மாவட்டங்களிலிருந்து 5 பேர் உட்பட பிற மாவட்டங்களிலிருந்து 74 மாணவ – மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் வி.ஐ.டியின் வேலூர் மற்றும் சென்னை வளாகங்களில் இலவசக் கல்வி பெற இருக்கின்றனர்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிண்டி அண்ணா பல்கலைக்கழக குடியிருப்பில் வசிக்கும் குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கியதற்கு கனிமொழி எம்.பி.க்கும் அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் வேல்ராஜ், பதிவாளர் ரவிகுமாருக்கும் தலைவர் நடராஜன் நன்றி கூறினார்.

இருதய ஆபரேஷனில் அதிகமாக ரோபோ சிகிச்சை செய்து அப்பல்லோ மருத்துவமனை சாதனை: உலகின் சிறந்த ‘ஸ்மார்ட்’ மருத்துவமனையாக தேர்வு

சேர்மன் டாக்டர் பிரதாப் ரெட்டி, பிரீதா ரெட்டி பெருமிதம்

சென்னை, நவ.17–

சென்னை அப்பல்லோ மருத்துவமனை, இருதய ஆபரேஷனில் அதிக ரோபோ சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளது. இது உலகின் சிறந்த ‘ஸ்மார்ட்’ மருத்துவமனையாகவும், சென்னை அப்பல்லோ இருதய மருத்துவமனை சிறந்த சிறப்பு வசதி மருத்துவமனையாகவும் திகழ்கிறது என்று டைம்ஸ் ஹெல்த் ஆய்வு விருது வழங்கியுள்ளது.

இந்தியாவின் தலைசிறந்த 11 மருத்துவமனைகளில் 5 அப்பல்லோ மருத்துமனைகள் முதலிடம் பிடித்துள்ளன. இதுவரை தனியார் துறையில் அப்பல்லோ மருத்துவமனை 50 லட்சம் தடுப்பூசிகள் போட்டு சாதனை படைத்துள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவால் மழைக்கால மருத்துவ முகாம்களுக்கு, அப்பல்லோ மருத்துவமனை இணைந்து உலகத்தர மருத்துவ சிகிச்சை இலவசமாக வழங்குகிறது. 2வது காலாண்டில் (ஜூலை முதல் செப்டம்பர் வரை) ரூ.3714 கோடி வருவாயும், ரூ.248 கோடியாக 3 மடங்கு லாபம் சம்பாதித்துள்ளது என்று சேர்மன் டாக்டர் பிரதாப் ரெட்டி, துணை சேர்மன் பிரீதா ரெட்டி ஆகியோர் தெரிவித்தனர்.

சர்வதேச விமான சர்வீஸ் கட்டுப்பாடுகள் தளர்வு காரணமாக பெருமளவில் சர்வதேச நோயாளிகள் அப்பல்லோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரத் தயாராக உள்ளனர்.

அப்பல்லோ டிஜிட்டல் மயமாக செயலி மூலம் மருந்து விற்பனை, மருத்துவர் ஆலோசனை வசதிகளை வழங்கியுள்ளது. ஆர்டர் செய்த 40 நிமிடத்தில் மருந்து வீடு தேடி வரும் என்றார் துணை சேர்மன் பிரீதா ரெட்டி.

அப்பல்லோ மருத்துவமனையில் 2வது காலாண்டில் லாபம் 3 மடங்கு அதிகமாக ரூ.247.8 கோடியாக உயர்ந்துள்ளது. அரையாண்டில் வருவாய் 33% அதிகமாக ரூ.5 ஆயிரத்து 817 கோடியாக உயர்ந்துள்ளது. லாபம் ரூ. 336 கோடியாக உள்ளது என்றும் பிரீதா ரெட்டி தெரிவித்தார்.

இம்மருத்துவமனை மொத்தம் 7 ஆயிரத்து 647 படுகை கொண்ட மருத்துவமனைகளை நிர்வகிக்கிறது. புதியதாக அசாமில் 180 படுக்கை கொண்ட எக்சல்கேர் மருத்துவமனையை ஏற்கனவே உள்ள மருத்துவமனையுடன் இணைத்துள்ளது என்றார் அவர்.

இதன் நிர்வாக இயக்குனர் சுனீதா ரெட்டி பேசுகையில், அப்பல்லோ மருத்துவமனை வடகிழக்கு மாநிலங்களில் நம்பிக்கை பெற்ற மருத்துவமனையாக திகழ்கிறது. அசாம் மாநிலத்தில் கவுகாத்தியில் எக்சல் கேர் மருத்துவமனையை ஏற்றுள்ளது என்றும் தெரிவித்தார்.

21–ந் தேதி புவனகிரியில் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவன மகா கும்பாபிஷேகம்

மந்திராலய பீடாதிபதி சுபுதேந்திர தீர்த்தர் பங்கேற்பு

புவனகிரி, நவ. 17–

புவனகிரி ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருத்திகா பிருந்தாவனம் மகா கும்பாபிஷேகத்தை 21–ந் தேதி மந்திராலய பீடாதிபதி சுபுதேந்திர தீர்த்தர் நடத்தி வைக்கிறார்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகில் உள்ள புவனகிரியில் மந்திராலய மகான் ஸ்ரீ ராகவேந்திரர் அவதாரம் செய்தார். புவனகிரியில் அவர் பிறந்த இல்லத்தில் நடிகர் ரஜினிகாந்த் அடிக்கல் நாட்டி 33 ஆண்டுகளாக ஸ்ரீ ராகவேந்திர பிருந்தாவன் அமைந்துள்ளது. ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருத்திகா பிருந்தாவனம் புணர் பிரதிஷ்டை மற்றும் மகா கும்பாபிஷேகம், ஸ்ரீ ராகவேந்திர மூலஸ்தான கருங்கல் மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதி, அன்னதான மண்டபவம், ஆலய தோரன வாயில்கள் மற்றும் மனவளர்ச்சி மாற்றுத்திறனாளிகள் பள்ளிக் கட்டிட திறப்பு விழா 21–ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் 10 மணி வரை நடைபெறுகிறது.

விழாவில் மந்திராலய மட பீடாதிபதி ஸ்ரீஸ்ரீ 1008 சுபுதேந்திர தீர்த்த சுவாமிகள் கலந்து கொண்டு கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கிறார். இதையொட்டி 21–ந் தேதி காலை 5 மணிக்கு ஹோமங்களும், ஸ்ரீ மூல ராமர் பூஜையும், காலை 7.15 முதல் 8.15 மணிக்குள் பிருந்தாவன பிரதிஷ்டா அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. 1 மணிக்கு அன்னதானமும் நடைபெறும். விழாவில் மந்திராலயம் ஸ்ரீ மான் கிரியாச்சாரியார் சுவாமிகள் கும்பாபிஷேக சிறப்பு உபன்யாசம் மற்றும் வாழ்த்துரை வழங்குகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை புவனகிரி மகான் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் புனித தொண்டு அறக்கட்டளை நிறுவனத் தலைவர் வி.வி.சுவாமிநாதன், தலைவர் எஸ்.ஆர். ராமநாதன், செயலாளர் ஜி. உதயசூரியன், பொருளாளர் கே.கதிர்வேலு, உறுப்பினர்கள் எம். கணேசன், வி. நடராஜன், சி.சுபாஷ் சந்திரன், எஸ்.கோபால், எஸ்.மோகன், ஏ.ஜோதி செல்வமுத்துக்குமார் மற்றும் அர்ச்சகர் கொளக்குடி என். ரகு ஆச்சாரியார் மற்றும் பலர் செய்து வருகின்றனர்.

போரூர் இசிஜ ஆதித் திருச்சபை 63வது ஆண்டு விழா

சென்னை, நவ. 17–

போரூர் இசிஜ ஆதித் திருச்சபையின் 63வது ஆண்டு சிறப்பு ஆராதனை விழா சிறப்பாக நடந்தது.

இவ்விழாவில் இசிஜ சென்னை பிஷப் கதிரொளி மாணிக்கம் தேவ செய்தி வழங்கினார். மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்தினர். சபை போதகர் இன்பா அனைவருக்கும் சால்வை அணிவித்து வரவேற்றார்.

போரூர் இசிஜ. ஆதித் திருச்சபை வரலாற்று சிறப்பு மிக்க சபையாகும். இச்சபையில் 1957ம் ஆண்டு தந்தை பேராயர் எம்.எஸ்றா சற்குணம் இறையியல் பயிற்சி முடித்து முதல் முதலாக இங்குதான் இறைபணி ஆற்றினார். அன்று கூரை கொட்டகையாக இருந்த சபை இவரது பெருமுயற்சியால் இன்று கம்பீரமான காட்சியோடு மட்டுமல்லாமல் சாட்சியாக அதாவது இசிஜயின் முதல் திருச்சபையாக உள்ளது.

இத்திருச்சபையின் 63வது ஆண்டு விழாவில் அவரது மகளும் இசிஜ சென்னை பேராயருமான கதிரொளி மாணிக்கம் கலந்து கொண்டு தேவ செய்தி வழங்கியது சிறப்பம்சமாகும். இவ்விழாவில் 153வது வட்ட தி.மு. கழக செயலாளர் ராமலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சாவண்ட் இன்போகாம் லிமிடெட்

CIN : L72200TN1978PLC058225

பதிவு அலுவலகம்: கார்ப்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 3வது அவென்யூ, இந்திரா நகர், அடையார், சென்னை– 600 020. Tel : 91–022–40750100 | Fax: 91–022 22044801, Email sil.compliance@gmail.com | Website : www.savant-infocomm.co.in

43–வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள சாவண்ட் இன்போகாம் லிமிடெட்டின் (‘‘கம்பெனி’’) உறுப்பினர்களுக்கான 43வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) வியாழக்கிழமை, 09 டிசம்பர், 2021 அன்று மாலை 2.00 மணிக்கு காணொலி காட்சி/பிற ஆடியோ காட்சி முறையில் ("VC/OAVM") மட்டுமே நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா ஆகியவை வெளியிட்ட பொதுச் சுற்றறிக்கைகளுக்கு இணங்க கம்பெனி/டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் 2020–21–ம் நிதி ஆண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு 16 நவம்பர், 2021 அன்று மின்னணு முறையில் மட்டுமே கம்பெனி மின்னஞ்சல் மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. காகித வடிவில் வருடாந்திர அறிக்கையை அனுப்புதல் கைவிடப்பட்டுள்ளது.

2020–21–ம் நிதி ஆண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை, இதர அலுவல்களை உள்ளடக்கிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்ட விளக்க அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளமான www.savant–infocomm.co.in–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இது இதனுடன் தொடர்புடைய ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் பிஎஸ்இ லிமிடெட்டிலும் ("BSE") உள்ளது. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் ("NSDL") இணையதளம் www.evoting.nsdl.com–லும் உள்ளது.

மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யும்/புதுப்பிக்கும் முறை:

1. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் கம்பெனியிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்காதவர்கள், உறுப்பினரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடும் கையொப்பமிடப்பட்ட கோரிக்கை கடிதத்தின் நகல், பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல் மற்றும் உறுப்பினரின் முகவரிக்கு ஆதரவாக எந்தவொரு ஆவணத்தின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (ஓட்டுநர் உரிமம், தேர்தல் அடையாள அட்டை, பாஸ்போர்ட் போன்றவை) ஆகியவற்றை கம்பெனியின் RTAக்கு rnt.helpdesk@linkintime.co.in அல்லது கம்பெனியின் sil.compliance@gmail.comக்கு எழுதுவதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. டிமெட்டீரியலைஸ்டு முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யுமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு

வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பரிவர்த்தனை மேற்கொள்ள வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன் மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு முறையில் மட்டுமே உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை அளிக்க கம்பெனி வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான மின்னணு முறையிலான வசதியை வழங்குகிறது. இந்த நோக்கத்திற்காக கம்பெனி என்எஸ்டிஎல் உடன் இணைந்து மின்னணு சேவையை வழங்குகிறது. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 103ன் கீழ் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கைக்காக கணக்கிடப்படுவார்கள்.

காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் அல்லது கம்பெனியில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாதவர்கள், வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள முறையின்படி, வருடாந்திர பொதுக் கூட்ட நடவடிக்கைகளின்போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கலாம்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்டவற்றை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு திங்கட்கிழமை, டிசம்பர் 06, 2021 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்கி, புதன்கிழமை, டிசம்பர் 08, 2021 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது. தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு அதனைத் தொடர்ந்து என்எஸ்டிஎல்–ஆல் நிறுத்தம் செய்யப்படும். ஒரு முறை தீர்மானத்தின் மீது வாக்களித்த உறுப்பினர் அதனைத் தொடர்ந்து மாற்றி வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.
2. உறுப்பினர்களுக்கான வாக்களிக்கும் உரிமையானது (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களித்தல்) கட் ஆப் தேதியான வியாழக்கிழமை, டிசம்பர் 02, 2021 (கட் ஆப் தேதி) அன்று அவர்கள் வைத்துள்ள கம்பெனியின் செலுத்தப்பட்ட சமபங்குகளின் விகிதத்தின் அடிப்படையில் இருக்கும். கட் ஆப் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பலன்பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்குப் பதிவு வசதியை பெற முடியும்.
3. அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினராகும் எந்தவொரு நபரும் மற்றும் கட் ஆப் தேதியன்று கம்பெனியின் பங்குகளை வைத்துள்ளவர்களும் evoting@nsdl.co.inக்கு மின்னஞ்சல் அனுப்பி அல்லது என்எஸ்டிஎல்–ன் கட்டணமில்லா தொலைபேசி எண்.: 1800 1020 990 / 1800 224 430க்கு தொடர்பு கொண்டு லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டு ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
4. VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கும், தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காதவர்களுக்கும் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது மின்னணு வாக்குப்பதிவு வசதி அளிக்கப்படும்.
5. வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன் தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்க தகுதி உடையவர் ஆவார். ஆனால், வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன் தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் அந்த தீர்மானங்கள் மீது வாக்களித்த உறுப்பினர்கள் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டாது.
6. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் அல்லது அதற்கு முன் உதவி தேவைப்பட்டால், அது குறித்து உறுப்பினர்கள் என்எஸ்டிஎல்–ன் evoting@nsdl.co.in அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 1020 990 / 1800 224 430க்கு தொடர்பு கொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு முடிவுகள் வருடாந்திர பொதுக் கூட்டம் முடிந்த 48 மணி நேரத்திற்கு மிகாமல் அறிவிக்கப்படும். ஆராய்வாளர் அறிக்கையுடன் கூடிய அறிவிக்கப்பட்ட முடிவுகள் கம்பெனியின் இணையதளமான www.savant–infocomm.co.in மற்றும் என்எஸ்டிஎல் இணையதளம் www.evoting.nsdl.comலும் வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அந்த முடிவுகள் ஸ்டாக் எக்சேஞ்சான BSE லிமிடெட்டிற்கு தெரிவிக்கப்படும். மேலும் அதன் இணையதளம் www.bseindia.comல் இந்த முடிவுகள் கிடைக்கும்.

இயக்குனர்கள் குழு உத்தரவுப்படி
சாவண்ட் இன்போகாம் லிமிடெட்டுக்காக

இடம்: சென்னை
தேதி: 16 நவம்பர், 2021

ஒப்பம்/– ஹர்ஷ் பரீக்
இயக்குனர் (DIN: 00106236)

HYUNDAI

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட்

CIN: U29309TN1996PLC035377

பதிவு அலுவலகம் மற்றும் தொழிற்சாலை,
மனை எண். எச்.1 சிப்காட் இண்டஸ்ட்ரியல் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு – 602 117.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 201(2) மற்றும் கம்பெனிகள் விதிகள் 2014 (நிர்வாக அதிகாரி மற்றும் ஊதிய நியமனம்)

அட்டவணை V–ன்படி அறிவிப்பு

முறையே 28 செப்டம்பர் 2021 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டம் மற்றும் 25 அக்டோபர், 2021 அன்று நடைபெற்ற கம்பெனியின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டபடி **திரு. டோசிக் கிம் (DIN 09313128)** அவர்களை கம்பெனியின் முழு நேர இயக்குனராக 28 செப்டம்பர் 2021 முதல் 3 ஆண்டு காலத்திற்கு நியமனம் செய்ய மத்திய அரசின் ஒப்புதலை பெறுவதற்காக விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய மெசர்ஸ் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் உத்தேசித்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

குழுவின் ஆணைப்படி
ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் சார்பாக
M V VIDYA
கம்பெனி செயலாளர்
ICSI Membership No.: A7296

இடம்: இருங்காட்டுகோட்டை
தேதி : 17.11.2021

ரவி குமார் டிஸ்டிலரீஸ் லிமிடெட்

CIN:L51909PY1993PLC008493

பதிவு அலுவலகம் : C-9, C-10 இன்டஸ்டிரீயல் எஸ்டேட், 2வது மெயின் ரோடு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009. போன் : 0413-2244007, 2248888, 2248887, E-mail: cs@ravikumardistilleries.com Web site : www.ravikumardistilleries.com

30.09.2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2021 (த.ஆகாதது)	முடிந்த அரையாண்டு 30.09.2021 (த.ஆகாதது)	முடிந்த காலாண்டு 30.09.2020 (த.ஆகாதது)
1	செயல்பாடுகளில் இருந்து நிகர விற்பனை/வருமானம்	283.53	328.01	0.69
2	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / நஷ்டம் (வரிக்கு முந்தைய, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	(240.25)	(389.53)	(174.91)
3	வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது	(240.25)	(389.53)	(374.91)
4	வரிக்கு பின் விரிவான வருமானம்	(240.25)	(388.78)	(374.91)
5.	நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருவாய்	(240.25)	(388.78)	(374.91)
6	சமபங்கு மூலதனம்	2,400.00	2,400.00	2,400.00
7.	EPS (Rs.)			
	அடிப்படை	(1.00)	(1.62)	(1.56)
	திட்டம் குறைந்தது	(1.00)	(1.62)	(1.56)

குறிப்பு : i) மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளின் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். 30.09.2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழுபடிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளங்களிலும் மற்றும் கம்பெனியின் இணையதளமான www.ravikumardistilleries.com காணலாம்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ரவி குமார் டிஸ்டிரில்லரிஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
பத்ரிநாத் எஸ் காந்தி
செயல் இயக்குனர் – DIN: 01960087

இடம் : புதுச்சேரி
தேதி : 15-11-2021

IN THE COURT OF ADMINISTRATOR GENERAL OF TAMILNADU
(Testamentary and Intestate Jurisdiction)
C.A. No.5 of 2021

In the matter of U /s.29 of Administrators General Act 45 of 1963 and in the matter of Succession Certificate in respect of Certain Securities / Debts Belongmg of Mr.K'Kaviarusan (deceased) intestate

1. Mrs.K.Ranjitha, W/o.Kalimuthu,
2. Mrs.K.Jeyamani, W/o.Late.K.Kaviarasan,
No.17 /10(1), Abith Nagar, Choolaimedu, Chennai-94.
(Address same to Both Petitioners) ... Petitioners

-Vs-

The Branch Manager, Indian Overseas Bank (IOB), Choolaimedu Branch,
O.No.222, Choolaimedu High Road, 1st Floor,
Choolaimedu, Chennai - 600 094. ... Respondent

All the persons claiming to have any interest in the debts of the above named Mr.K.Kaviarasan (Deceased) was resided at No.17 /10(1), Abith Nagar, Choolaimedu, Chennai-600094, and died on 14.06.2020 are hereby cited to come and see the proceedings before the Hon'ble Administrator General of Tamil Nadu, High Court Building, Chennai-600104. C.A. No.5 of 2021 filed to grant of Succession Certificate and posted for hearing on 26.11.2021 at 10.30 a.m. If anyone having any objections in this regard can file their necessary objections, before the Hon'ble Administrator General of Tamil Nadu.

S.KANNAN & G.K.SREEDHAR,
Advocates,
O.No.223/1-L, Choolaimedu High Road, Surlya Towers,
Ist Floor, Choolaimedu, Chennai - 600 094.

NOTICE

To,
Mr. Vikram Kumar B. Jain Door no.76/1 - G, Ocean Towers, Basin Bridge, Kareem Beedi, Chennai - 600 021

In the court of III Addl. City Civil Court, At Chennai
O.S. No.2278 of 2021

S. Rahamath
Vs
1. Vikram Kumar B. Jain
2. Rajesh 3. Sub-registrar, Madhavaram
...Petitioner/Plaintiff
Respondents/Defendants

My client has filed a civil suit against you VIKRAM KUMAR B. JAIN (1st Defendant), this is to inform that cry client has noticed through this paper publication against 1. defendant (VIKRAM KUMAR B. JAIN) in the above suit, as per order of the IIIrd Add. City Civil Court, this notice is to call you upon to present before the Hon'ble Master court on 10.12.2021 at 10:30 A.M. in person or through your pleader failing which you will be treated as Ex-parte.

BY R. ILANCHIZHIAN
N. ANWAR BASRA
COUNSELS FOR PLAINTIFF

ஏல அறிவிப்பு

ஸ்ரீசுபம் பேங்கர்ஸ் அடகு வணிகர், 42சி, கடைவீதி, செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் என்கிற அடகு வணிகர் வசம் 05.08.2019 முதல் 30.07.2020 வரை அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத அடகுப் பொருட்களை 24.11.2021 அன்று காலை 10 மணியளவில் மேற்படி அடகு வணிகர் கடையில் செங்கம் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் முன்னிலையில் ஏலதாரர் ஏ.தனக்கோட்டி அவர்களால் ஏலம் போடப்படும்.

★★★★

எம்.பாலசுப்பிரமணியன் அடகு கடை, 33, கடைவீதி, செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் என்கிற அடகு வணிகர் வசம் 10.04.2017 முதல் 24.03.2020 வரை அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத அடகுப் பொருட்களை 25.11.2021 அன்று காலை 10 மணியளவில் மேற்படி அடகு வணிகர் கடையில் செங்கம் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் முன்னிலையில் ஏலதாரர் ஏ.தனக்கோட்டி அவர்களால் ஏலம் போடப்படும்.

★★★★

எம்/எஸ்.சுமங்கலி பைனான்சியர்ஸ், நெ.407/110, தேரடி வீதி, திருவண்ணாமலை என்கிற அடகு வணிகர் வசம் 01.01.2020 முதல் 31.06.2020 வரை அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத அடகுப் பொருட்களை 26.11.2021 அன்று காலை 10 மணியளவில் மேற்படி அடகு வணிகர் கடையில் திருவண்ணா மலை வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் முன்னிலையில் ஏலதாரர் ஏ.தனக்கோட்டி அவர்களால் ஏலம் போடப்படும்.

★★★★

எம்/எஸ். சுமங்கலி இன்வெஸ்மெண்ட், நெ.407/110, தேரடி வீதி, திருவண்ணாமலை என்கிற அடகு வணிகர் வசம் 09.01.2020 முதல் 19.06.2020 வரை அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத அடகுப் பொருட்களை 26.11.2021 அன்று பகல் 2 மணியளவில் மேற்படி அடகு வணிகர் கடையில் திருவண்ணாமலை வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் முன்னிலையில் ஏலதாரர் ஏ.தனக்கோட்டி அவர்களால் ஏலம் போடப்படும்.

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: 3வது மாடி, பஞ்சீல் டெக் பார்க், விமான் நகர், புனே– 411 014 மகாராஷ்டிரா.
கிளை அலுவலகம்: பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட், 8வது தளம், ரஹேஜா டவர்ஸ், #177, அண்ணா சாலை, சென்னை 600002
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் விவரங்கள்: பெயர் : வரதராஜ் M, மின்னஞ்சல் ஐடி: varadaraj.m@bajajfinserv.in
மொபைல் எண். 9884700303, 8669189048

ஏல அறிவிப்பு மூலம் பொது ஏலம்

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் (‘சட்டம்’)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உடன் கடன்தாரர் பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்('BFL')க்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டம் 2002 மற்றும் அங்குள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கூறிய அசையா சொத்து (‘பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்து’) கையகப்படுத்தப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி BFLக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை, பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை பெறுவதற்காக பாதுகாக்கப்பட்ட சொத்து பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும். கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம், விதி எண் 8 மற்றும் 9ன் கீழ் (இனிமேல் விதிகள் என குறிப்பிடப்படுகிறது) பாதுகாக்கப்பட்ட சொத்து விற்பனை மற்றும் "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில்’’ ஏலம் நடைபெறும். மற்றும் அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	உடன் கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	திரும்ப பெற வேண்டிய பாதுகாக்கப்பட்ட கடனுக்காக விற்கப்படும் சொத்து
கடன்தாரர் 1. B ஆனந்தன் வசிப்பிடம் : – 42 கல்கி இல்லம், கீழ் தளம், சுப்புலட்சுமி தெரு, கொளப்பாக்கம், சென்னை - 600128	உடன் கடன்தாரர்	மொத்தம்: ரூ.2939586/– (ரூபாய் இருபத் தொன்பது லட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று அறுபத்தியெட்டு மட்டும்) மற்றும் 11 நவம்பர் 2021 முதல் எதிர்கால வட்டி மற்றும் சேர்த்துள்ள கட்டணங்கள். கடன் கணக்கு எண். 403SHL42274329, 403SHL42274384

உரிமை பத்திரம் வைத்திருப்பவர் பெயர்	சொத்து விவரம்	ஏலங்கள் திறக்கப்படும் இடம், தேதி மற்றும் நேரம்	குறைந்தபட்ச விலை/இம்எடி/ ஏல அதிகரிப்பு	பங்கேற்பதற்கான கோரிக்கை கடிதம்/KYC ஆவணங்கள்/ EMD இன் சான்று போன்றவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்
B ஆனந்தன்	தமிழ்நாடு - 601 301, காஞ்சீபுரம், சென்னை, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, சக்தி நகர், சாலமங்கலம் கிராமம், எண்.90-ல் உள்ள 1350 சதுர அடி நிலம்.	தேதி: : 24 டிசம்பர் 2021 நேரம் : மதியம் 2.00 மணி இடம்: பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட், 8வது தளம், ரஹேஜா டவர்ஸ், #177, அண்ணா சாலை, சென்னை 600002	குறைந்தபட்ச விலை: ரூ.21,50,000/– EMD: குறைந்த பட்ச விலையில் 10%. ★★ ஸ்பாட்டில் ஏல உயர்வு அனுமதிக்கப்படாது	24 டிசம்பர் 2021 காலை 10.00 மணி

சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் : 20.11.2021 முதல் 22.12.2021 வரை காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

1.பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு தற்போதைய அல்லது எதிர்கால வில்லங்கங்களை அறிந்தோ அறியாமலோ "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில் பொது ஏலம் நடத்தப்படுகிறது. ஏல படிவம், அறிவிப்பு, பொது ஏலத்தின் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை **பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட், 8வது தளம், ரஹேஜா டவர்ஸ், #177, அண்ணா சாலை, சென்னை–600002** என்ற முகவரியில் பெறலாம்.
2. குறைந்தபட்ச விலைக்கு கீழே பாதுகாக்கப்பட்ட சொத்து விற்கப்படாது.
3. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த மற்றும் தகவலின்படி, சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை. எவ்வாறாயினும், விருப்பமுள்ள ஏலதாரர்கள் ஏதேனும் உரிமை கோரல்கள், கட்டணங்கள், நிலுவைத் தொகைகள், வில்லங்கங்கள் குறித்து தங்களுடைய சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் அவர்களின் ஏலத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன் சொத்தின் உரிமை, விஸ்தீரணம்/அளவீடு குறித்து திருப்திப்படுவது அவசியமாகும். சொத்தில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், ஏலத்தை சமர்ப்பித்த நாளிலிருந்து அனைத்து எதிர்கால வழி வகைகளுக்கும் பங்கேற்கும் ஏலதாரர் மட்டுமே பொறுப்பாவார்.
4.சொத்து மீதான கட்டணங்கள்/வில்லங்கங்கள் அல்லது வேறு எந்த விஷயத்திலும் ஏலத்தை சமர்ப்பித்த பிறகு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்து மீது எந்தவிதமான உரிமை கோரல்களும் ஏற்கப்படாது.
5.விற்பனையின் கீழ் உள்ள சொத்தைப் பொறுத்தமட்டில், அரசு, உள்ளூர் அதிகாரி அல்லது யாருக்கும் செலுத்த வேண்டிய கட்டணம், காப்புரிமை, வில்லங்கம், சொத்து வரி பாக்கிகள், மின்சார பாக்கிகள் போன்றவை அல்லது வேறு ஏதேனும் பாக்கிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/BFL பொறுப்பேற்க மாட்டார்.
6.பொது ஏல அறிவிப்பு/விளம்பரமானது பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டின் எந்தவொரு சலுகை, அர்ப்பணிப்பு அல்லது எந்தவொரு பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்கியதாகக் கருதப்படாது. எந்தவொரு மூன்றாம் தரப்பு கோரிக்கைகள்/உரிமைகள்/பாக்கிகளுக்கு எந்த வகையிலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/BFL பொறுப்பேற்க மாட்டார்.
7.விற்பனையானது SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட விதிகள்/நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
8. ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் (அ) உரிமை மற்றும் இணைப்பு ஆவணங்கள் மற்றும் (ஆ) சொத்தை ஆய்வு செய்து, பாதுகாக்கப்பட்ட சொத்து மற்றும் விவரக்குறிப்பு குறித்து தங்களைத் திருப்திப்படுத்தி கொள்வது ஏலதாரர்களின் பொறுப்பாகும். ஆய்வுக்காக வளாகத்திற்குள் நுழைவதற்கு முன், ஆர்வமுள்ள வாங்குபவர் அவர்களின் அடையாளம், முகவரி மற்றும் தொடர்பு விவரங்களை பதிவேட்டில் வழங்குவது அவசியம், இது அவர்களின் கையொப்பத்தின் கீழ் சொத்தில் நுழைவதையும் வெளியேறுவதையும் உறுதிப்படுத்துகிறது.
9. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலங்களை இஎம்டி–உடன் சமர்ப்பிக்க வேண்டும், இதனை மேலே குறிப்பிட்டுள்ள கடைசி நாள் மற்றும் நேரத்திற்கு முன்பு பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட் பெயரில் டிமாண்ட் டிராப்ட் மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.
10. ஏலங்கள் மற்ற ஆவணங்களை சீலிட்ட உறையில் வைத்து அதில் **"வாங்குவதற்கான ஆபர்’’** 1. B. ஆனந்தன், LAN:- 403SHL42274329, 403SHL42274384 என்று குறிப்பிட்டு ஏலங்களை சமர்ப்பிக்கும் கடைசி தேதி அன்றோ அல்லது அதற்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
11. ஏலத்தைச் சமர்ப்பிக்கும் போது ஏலதாரர் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்: I) இஎம்டி செலுத்தியதற்கான சான்று II) பான் கார்டின் நகல் III) அடையாளச் சான்று/ முகவரிச் சான்று/ ஆதார் அட்டை/ KYC (சுய சான்றளிக்கப்பட்டவை) இவை இல்லாமல் இருந்தால் ஏலம் நிராகரிக்கப்படும்.
12. ஏலதாரர் மட்டுமே பொது ஏல நடவடிக்கையில் பங்கேற்க முடியும் மற்றும் வேறு யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
13. வெற்றி பெற்ற ஏலதாரர், ஆபரை ஏற்றுக் கொண்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி வெற்றி பெற்ற ஏலதாரரை அறிவித்தவுடன், வாங்கும் தொகையில் 25% (ஏற்கனவே செலுத்தப்பட்ட முன் இஎம்டி சரிசெய்த பிறகு) டெபாசிட் செய்ய வேண்டும், தவறினால் EMD ஆக செலுத்திய பணம் பறிமுதல் செய்யப்படும். பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டிடமிருந்து ஏலதாரர் கோர முடியாது.
14. வாங்கிய தொகையில் மீதமுள்ள 75% தொகையை வெற்றி பெற்ற ஏலதாரர் 15 நாட்களுக்குள் டெபாசிட் செய்யப்பட வேண்டும், அவ்வாறு கட்டத் தவறினால் ஏலதாரர் ஏற்கனவே டெபாசிட் செய்த தொகைகள் எந்த அறிவிப்பும் இல்லாமல் தானாகவே பறிமுதல் செய்யப்படும். மற்றும் பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான எந்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படாது. மேலும், சொத்து மறு ஏலத்திற்கு விடப்படும், மேலும் கட்டத் தவறியவருக்கு சொத்து/தொகை தொடர்பாக எந்த உரிமைகோரல்/உரிமையும் இருக்காது மற்றும் மறு ஏலத்தில் பங்கேற்க அவருக்கு தகுதி இல்லை.
15. பாதுகாக்கப்பட்ட சொத்தை விற்பது தொடர்பாக ஏலதாரர்கள்/வெற்றி பெற்ற ஏலதாரர் டெபாசிட் செய்த தொகை அல்லது இஎம்டிக்கு எந்த வட்டியும் பொருந்தாது.
16.(அ) பொருந்தக்கூடிய முத்திரை தீர்வை/பதிவு/பரிமாற்றக் கட்டணங்கள்; (ஆ) எந்தவொரு நபர், அசோசியேஷன் அல்லது அதிகாரிக்கு செலுத்த வேண்டிய அனைத்து சட்டப்பூர்வ, சட்டப்பூர்வமற்ற, மாற்றம், மின்சாரம், கழிவுநீர் கட்டணம், ஏதேனும் பாக்கிகள், வரி, கட்டணங்கள், வரிகள், விலைகள், மதிப்பீட்டுக் கட்டணங்கள் போன்றவற்றை வெற்றிகரமான ஏலதாரர் மட்டுமே ஏற்க வேண்டும்.
17. வெற்றி பெற்ற ஏலதாரருக்கு பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் விற்பனைச் சான்றிதழ் வழங்கப்படும்.
18. வெற்றி பெற்ற ஏலதாரர், நடைமுறையில் உள்ள முத்திரை மற்றும் பதிவுச் சட்ட விதிகளின்படி விற்பனைச் சான்றிதழின் விலையில் பதிவு போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வெற்றி பெற்ற ஏலதாரர் பொருந்தக்கூடிய போக்குவரத்து, பதிவுக் கட்டணம், முத்திரைக் கட்டணம், வரிகள், கட்டணம் போன்றவற்றிற்கான கட்டணங்களை ஏற்றுக்கொள்வார்.
19. ஏதேனும் வில்லங்கங்களுக்கு உட்பட்டு சொத்தை விற்றால், வெற்றி பெற்ற ஏலதாரர்/வாங்குபவர், வட்டி, செலவு, செலவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய வில்லங்கத்திற்கு செலுத்தத் தேவையான பணத்தை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு டெபாசிட் செய்ய வேண்டும்.
20. ஒரு வேளை பொது ஏலம் நிறுத்தப்பட்டாலோ, ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது மறுதிட்டமிடப்பட்டாலோ அல்லது ரத்து செய்யப்பட்டாலோ, BFL கிளையின் அறிவிப்புப் பலகையில் ஒரு பொது அறிவிப்பு வைக்கப்படும், மேலும் இது தொடர்பான தனிப்பட்ட/தனிப்பட்ட தகவல் ஏலதாரர்கள் எவருக்கும் அனுப்பப்படாது.
21. ஏலதாரர்களால் ஏலத்தை சமர்ப்பிப்பது, அவர்கள் பொது ஏலத்தை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து, புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படுகிறது.
22. வெற்றி பெறாத ஏலதாரர்களின் முன்வைப்புத் தொகை ஏல நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் திரும்ப வழங்கப்படும்.
23.அதிகபட்ச ஆபர்/ஏலத்தை ஏற்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கடமைப்பட்டவர் அல்ல, மேலும் ஏதேனும் அல்லது அனைத்து சலுகைகளையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது பொது ஏலத்தை ஒத்தி வைக்கவோ/ தள்ளி வைக்கவோ/ ரத்து செய்யவோ அதற்கான முழு உரிமையும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உள்ளது.
24.மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து: https://www.bajajfinserv.in//B_ANANDAN.pdf ஆப்–ஐ பார்க்கவும்.

தேதி: 17.11.2021 இடம்: காஞ்சீபுரம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி வரதராஜ் M, பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்